நகர் ஊரமைப்புத் துறை - DTCP
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோவிலூர் ஊராட்சி
(திட்டமில்லா பகுதி)

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை வட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் ஊராட்சி, வெம்பூர் கிராமம், சர்வே எண்கள்: 633/2C2B1, 14-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : RXKJYEM0_ நாள்: 22.12.2023

அளவு : 1:400 (1 செ.மீ = 4மீ)

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 9725.00 ச.மீ (2.40 ஏக்கர்)

ஒதுக்கப்பட்ட மனைகள் : 51 + மனுதாரர் உபயோகம்

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

மனைப்பிரிவு சாலை :

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

1) மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு : 2893.87 ச.மீ (மூலை முடக்கு உட்பட)

மனைகளின் பரப்பளவு = (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)
= (9725.00 - 2893.87 =6831.13 ச.மீ)

2).உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)X 0.50%

(9725.00 - 2893.87)X 0.50 %= 34.15 ச.மீ)

ஒதுக்கிய பரப்பு - 37.62 ச.மீ (0.55%)

3). TANGEDCO -க்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)X 0.50%

(9725.00 - 2893.87)X 0.50 %= 34.15 ச.மீ)

ஒதுக்கிய பரப்பு - 44.98 ச.மீ (0.65%)

4).பூங்கா ஒதுக்கீடு :

பூங்காவிற்கு தேவையான பரப்பு = 10 % (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு
= 10% (9725.00 ச.மீ - 2893.87 ச.மீ= 683.11 ச.மீ

பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான தொகை அரசாணை 18 நந்தி (ம) கு.வ.து. நாள் 04.02.2019 விதி 47 (6) (ம) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றுறிக்கை கடிதம் ந.க. எண் 4367/2019 - BA2 நாள்: 05.02.2020 - ல் தெரிவித்துள்ளதன்படி, அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் உள்ளபடி உரிய தொகையை உரிய கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு

9.00 மீட்டருக்கும் குறைவாக உள்ள சாலைகளுக்கு 1.50மீ கட்டிட வரம்பு விடப்பட வேண்டும்


9.00மீ முதல் 18.00மீ வரை உள்ள சாலைகளுக்கு 3.00மீ கட்டிட வரம்பு விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றுறிக்கை ந.க.எண்.19799/2020/போ நாள்:24.12.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு மற்றும் பூங்கா ஆகியவைகும் உள்ளாட்சிக்கும் அரசாணை எண்: 18, ந.நி.(ம)கு.வ.(ந.ப.ப.) துறை நாள்:04.02.2019-ன்படியும் அரசாணை எண்.16, ந.நி (ம)கு.வ.துறை, நாள்.31.01.2020 ன்படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும், TANGEDCO என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினை மின்பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது ஊராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.
3. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் படி (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், தான பத்திரம், பொது அதிகார பத்திரம், மற்றும் பட்டா) முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள், தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடம் தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பிப்பாதையினை, மனுதாரர் தன் சொந்த செலவில், சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதை உள்ளாட்சியால் உறுதி செய்த பின் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டும்.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றிக்கையின்படி,"The Tamil nadu Government in G.O. Ms. No:112, Housing and Urban Development Department, Dated : 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016 .The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any piot, apartment or buliding as tha case may be in any Real Estate project or part of it only after registering the real estate project with the TNRERA (Tamil Nadu Real Estate Regulatory Authority)"

குறிப்பு : அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO. 08 /2024



சு.மகேந்திரன்
அளவர்/உதவி வரைவாளர்

Signature valid
Signed by: Deputy Director
Location: Dindigul
Date: 2024.01.06 22:11:02

Signature valid
Signed by: Village Panchayat
Location: Dindigul
Date: 2024.06.25 17:12:28

ந.விஜயகுமார்
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்.